நீதித்துறை நடுவர் நீதிமன்றம் எண்.1 நாகப்பட்டினம்

வழக்கு எண்: STC 865/2025

வழக்கு சாட்சி :Additional witness –1 PW3

| | | | | |
|---|---|---|---|---|
| பெயர் | : சுந்தரைய்யா | தொழில் | : | |
| தந்தை பெயர் | : நடேசன் | | : | |
| கிராமம் | : நகர காவல் நிலையம், நாகப்பட்டினம் | வயது | : | 49/ 2026 |
| தாலுக்கா | : நாகப்பட்டினம் | | | |

Solemnly affirmed in accordance with the provision of Oaths Act, 1969 (Act 44 of 1969), of the day of **03.06.2026**

( எதிரி ஆஜர் இல்லை. எதிரி சார்பில் பிரிவு 355 BNSS தரப்பில் மனு தாக்கல் செய்யப்பட்டு அனுமதிக்கப்பட்டது.)

**முதல் விசாரணை:**

நான் தற்போது நாகப்பட்டினம் நகர காவல் நிலையத்தில் சிறப்பு உதவி ஆய்வாளராக பணிபுரிந்து வருகிறேன் . இவ்வழக்கின் புலன் விசாரணை அதிகாரியான உதவி ஆய்வாளர் கனகராஜ் மருத்துவ விடுப்பில் உள்ளதால் அவருடைய பணியாற்றிய வகையில் அவரது கையொப்பம் நன்கு தெரியும் என்பதாலும், காலதாமத்தை தவிர்கும் பொருட்டு நீதியின் நலன் கருதி வழக்கு கோப்புகளின் அடிப்படையில் நான் சாட்சியம் அளிக்கிறேன்.

கடந்த 28.10.2024 ம் தேதி காலை 11.00 மணியளிவல் நாகப்பட்டினம் நகர காவல் நிலைய உதவி ஆய்வாளர் கனகராஜ் மற்றும் தலைமை காவலர்கள் ரஞ்சித் மற்றும் ரமேஷ் ஆகியோர் போலீஸ் பார்ட்டி சகிதம் நாகப்பட்டினம் நகர காவல் நிலைய சரகம் நாகப்பட்டினம் புத்தூர் சாலையில் ரோந்து பணியில் இருந்த போது புத்தூர் வடக்கு முச்சந்தி அருகில் எவ்வித அனுமதியும் இன்றி போக்குவரத்துக்கும் பொதுமக்களுக்கும் இடையூறாகவும் வாகனங்களை ஓட்டி வருபவர்களுக்கு இடையூறாகவும் சுமார் 12X10=1 என்ற அளவுள்ள விழுப்புரம் விக்கிரவாண்டி மாநாடு தொடர்பான தமிழக வெற்றி கழக பிளக்ஸ்போர்டை இவ்வழக்கின் எதிரி சுகுமாரன் வயது 48 த/பெ. மாணிக்கவேல் சாமாந்தான் பேட்டை, நாகூர் என்பவரது புகைப்படத்துடன் கூடிய

பிளக்ஸ்போர்டை அப்புறப்படுத்தாமல் இருந்ததை பலமுறை எடுக்க கூறி எச்சரித்தும் பிளக்ஸ்போர்டு வைத்திருந்த குற்றத்திற்காக எதிரி மீது நாகப்பட்டினம் நகர காவல் நிலைய குற்ற எண். 230/2024 ச/பி. 4A(1a) TN OPEN PLACES (PREVENTION OF DISFIGUREMENT ) ACTன் படி 12.30 மணிக்கு முதல் தகவல் அறிக்கை பதிவு செய்துள்ளார். **மேற்படி முதல் தகவல் அறிக்கை அ.த.சா.ஆ.1 ஆக குறியீடு செய்யப்படுகிறது.**

வழக்கை விசாரணைக்கு எடுத்துக் கொண்ட உதவி ஆய்வாளர் பட்டியல் சாட்சிகள் தலைமை காவலர் ரஞ்சித் மற்றும் ரமேஷ் ஆகியோர்களை தனிதனியே விசாரிதது வாக்குமூலம் பதிவு செய்துள்ளார. இத்துடன் அவரது விசாரணையை முடித்து எதிரியின் செய்கையானது ச/பி. 4A(1a) TN OPEN PLACES (PREVENTION OF DISFIGUREMENT ) ACT ன் படி குற்றம் என 05.11.2024 ம் தேதி குற்ற இறுதி அறிக்கை தாக்கல் செய்துள்ளார்.

<u>எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை:</u>

இந்த வழக்கின் புகார்தாரரும் குற்ற இறுதி அறிக்கை தாக்கல் செய்தவரும் ஒரே நபர் தான் என்றால் சரிதான். இந்த வழக்கில் பிளக்ஸ்போர்டானது பாதசாரிகளுக்கும், போக்குவரத்திற்கும் இடஞ்சலாக இருந்ததாக வழக்கு கோப்பிலும், 3ம் தரப்பினர் வாக்குமூலத்திலும், தனிநபர் புகாரும் கிடையாது என்றால் சரிதான். பிளக்ஸ்போர்டு சம்பவ இடத்தில் இருந்ததாக புகைப்படம் எடுத்து புகைப்படம் நீதிமன்றததில் தாக்கல் செய்யப்படவில்லை என்றால் சரிதான். அதே போல் பிளக்ஸ்போர்டு அப்புறப்படுத்துவது போல் புகைப்படம் எதுவும் நீதிமன்றததில் தாக்கல் செய்யப்படவில்லை என்றால் சரிதான். அந்த பிளக்ஸ்போர்டும் காவல் நிலையத்தில் கொண்டு வந்தததற்கானவும் அந்த சம்பவத்தை ஊர்ஜிதப்படுத்தும் பொருட்டு எந்த புகைப்படமும் தாக்கல் செய்யவிலலை என்றால் சரிதான். சம்பவ நடந்ததாக சொல்லப்படும் இடத்தில் பிளக்ஸ்போர்டு இல்லை என்றும், அதனால் தான் எந்த ஆவண சாட்சியமும் தனிநபர் சாட்சிகளின் சாட்சியமும் முன்னிறுத்தப்படவில்லை என்றால் சரியல்ல. சுகுமார் என்பவர் தமிழக வெற்றிக் கழகத்தின் மாவட்ட செயலாளர் என்றால் சரிதான். 28.10.2024 அன்ற திமுக கட்சி ஆட்சி தான் தமிழகதத்தில் செயல்பட்டது எனற்ால் சரிதான். நாகப்பட்டினம் மாவட்டத்தில் இருந்து பெருந்திரளான மக்கள் விக்கிரவாண்டி

மாநாட்டிற்கு சென்றார்கள் என்றால் சரிதான். தவெக கட்சியின் வளர்ச்சியை முடக்குவதற்காகத்தான் ஆளும் திமுக கட்சி கொடுத்த அழுத்தின் பேரில் எதிரி மீது வழக்கு பதிவு செய்யப்பட்டுள்ளது என்றால் சரிதான். அ.சா.1, அ.சா.2 சம்பவம் நடந்ததாக கூறப்படும் இடத்திற்கு சென்றதாக எந்த குறிப்பும் முதல் தகவல் அறிக்கையில் இல்லை என்றால் சரியல்ல. எதிரியை சம்பந்தபடுத்தி தவறான நோக்கத்தில் எதிரி மீது முதல் தகவல் அறிக்கை தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. அ.சா.1, அ.சா.2 அன்றை ய தினத்தில் பணியிலேயே இல்லை என்றால் சரியல்ல. உதவி ஆய்வாளர் போட்ட வழக்கு என்பதற்காக தவறான இறுதி அறிக்கை என்று தெரிந்தும் பொய்யான சாட்சியம் அளிக்கிறேன் எனறால் சரியல்ல. முதல் விசாரணையில் கூறியுள்ள போல் எந்த சம்பமும் நடக்கவில்லை என்றால் சரியல்ல. உண்மை விபரம் தெரிய வந்திரும் என்ற காரணத்திற்காக வேறு காவல் ஆய்வாளரை வைத்து இறுதி அறிக்கை தாக்கல் செய்யப்படவில்லை என்றால் சரியல்ல.

சாட்சி என் முன்னால் சாட்சியம் அளிக்கப்பட்டு அதனை என்னால் தட்டச்சருக்குச் எடுத்து சொல்லப்பட்டு, அவர் என் முன்பு என் ஆணையின் பேரில் தட்டச்சு செய்து எதிர்மனுதாரர்கள் முன் சாட்சிக்குப் படித்துக் காண்பிக்கப்பட்டு சாட்சியால் சரி என்று ஒப்புக்கொள்ளப்பட்டது.

JAYANDRAN ANNSRAJA
Digitally signed by JAYANDRAN ANNSRAJA
Date: 2026.06.03 16:07:09 +0530

நீதித்துறை நடுவர் எண்.1,
நாகப்பட்டினம்.